[1984 மார்ச் 6

இணைப்பு— V.

(316-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத 27 வினா எண் 10188-க்கான விடையைக் காண்க).

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கடந்த 5 வருடங்களில் படிப்படியாக நிறைவேற்றியுள்ள திட்டப்பணிகள்

வருடம்.	சுற்றுலா விடுதி (ஓட்டல் தமிழ்நாடு)	துவங்கிய நாள்.
சுற்றுலா விடுதிகள் :		
1977	(1) சிதம்பரம்	25—02—1977
	(2) தஞ்சாவூர்	07—02—1977
1980	(3) மதுரை (3 நட்சத்திர ஓட்டல்)	29—12—1980
1982	(4) கோயம்புத்தூர் (3 நட்சத்திர ஓட்டல்).	28—05—1982
குடில்கள் :		
1979	(1) உதகமண்டலம்	31—03—1979
	பெருவழி விடுதிகள் :	
1978	(1) இராணிப்பேட்டை	24—09—1978
1979	(2) உளுந்தூர்பேட்டை ..	27—08—1979
இளைஞர் இல்லங்கள் :		
1981	(1) ஏற்காடு	02—08—1981
1982	(2) உதகமண்டலம் ..	28—05—1982
	(3) மாமல்லபுரம்	30—05—1982
	(4) மண்டபம்	11—10—1982
	(5) இராமேஸ்வரம்	12—10—1982
	தங்குமிடம் (Camping site) :	
1982	(1) மாமல்லபுரம்	30—05—1982

மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை :

1982–83 1,289 + 174 (துவங்கும் நிலையில் உள்ளது). (2—2—1983 நாளில்) —1,463 மொத்தம்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 6]

2. இக்கழகத்தினால் தற்போது நிறைவேற்றப்பட்டு வரும் மற்ற வளர்ச்சிப் பணிகள் :

மாமல்லபுரத்தில் அரும் பொருட்காட்சியகம் அமைத்தல், இராமேஸ்வரத்தில் துயில்கூடம், கன்னியாகுமரியில் இளைஞர் இல்லம் கட்டுதல், உதகமண்டலத்தில் ஏரி ஓரத்தில் சிற்றுண்டி விடுதி கட்டுதல், உல்லாச இரயில் வண்டி வாங்குதல், அதற்கான இருப்புப்பாதை அமைத்தல், சிறுவர் களியாட்டப்பூங்கா அமைத்தல், முதுமலையில் துயில்கூடமும், சிற்றுண்டியகமும் கட்டுதல், பிச்சாவரத்தில் துயில் கூடங்கள், குடில்கள், படகுத்துறை, சிற்றுண்டியகம் அமைத்தல் ஆகிய அரசுப் பணிகள் அனைத்தும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. கொடைக்கானலில் "கோக்கர்ஸ் வாக்" என்னுமிடத்திலும், குறிஞ்சி ஆண்டவர் கோயிலிலும், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் இரு தொலை நோக்கி இல்லங்கள் கட்டப்பட்டுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொடைக்கானலில் 76 படுக்கைகள் கொண்ட இளைஞர் இல்லம் (துயில்கூட விடுதி) கட்டி முடிக்கப்பட்டு செயல்படவுள்ளது. ஒகனேக்கல்லில் 42 படுக்கைகள் கொண்ட இளைஞர் இல்லமும் கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் துவங்கும் நிலையிலுள்ளது. மேலும் கொடைக்கானலில் சிற்றுண்டியகம் ஒன்றும் கட்டப்பட்டு வருகிறது. கிருஷ்ணகிரியில் 16 படுக்கைகள் கொண்ட பெருவழி விடுதி ஒன்று கட்டி முடிக்கப்பட்டு செயல்படத் துவங்கும் நிலயில் உள்ளது. மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை பொழுதுபோக்கு வளாகத்தில் 40 படுக்கைகள் கொண்ட கூடுதல் குடில்கள் 20 கட்டி முடிக்கப்பட்டு துவங்கும் நிலையிலுள்ளது.

3. இக்கழகத்தின் எதிர்காலத் திட்டங்கள் :

சென்னை நகரத்தில் ஒரு ஓட்டல் கட்டுவதற்கும் மற்றொரு ஓட்டல் வாங்குவதற்கும் கருத்துக்கள் உள்ளன. மாவட்டங்களில் சில இடங்களில் ஓட்டல்கள் கட்டுவதற்கான கருத்துருக்கள் ஆலோசனையில் உள்ளன. திருத்தணியில் மற்றும் காரைக்குடியில் பெருவழி விடுதி கட்டும் திட்டங்கள் உள்ளன.

4. போக்குவரத்து :

1972 ஆம் ஆண்டில் இரண்டே இரண்டு சொகுசுப் பேருந்துகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கழகத்தின் போக்குவரத்துப் பிரிவில் தற்போது 20 சொகுசு பேருந்துகள் உள்ளன. இவற்றில் 3 குளிர்பதன வசதி பெற்றவை. தற்போது இக்கழகம் தமிழ்நாடு மற்றும் தென்னிந்தியாவில் ஏழு நாட்கள் சிக்கனச் சுற்றுலா நடத்துகிறது. வார இறுதி சுற்றுப்பயணம் ஒன்றும் துவக்கியுள்ளது. மேலும், காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு நாள்தோறும் சுற்றுலாக்களை நடத்துகின்றது. இக்கழகம திருப்பதிக்கு அன்றாடம் சுற்றுலாப் போக்குவரத்து பயணங்களை நடத்துகிறது. நகர்வலப் பயணமும் இக்

கழகத்தால் சென்னையில் அன்றாடம் மேற்கொள்ளப்படுகிறது. இப்பயணத் திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடம் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளன. பல புதிய சுற்றுலாப் பயணத் திட்டங்களும் தேவைக்கேற்ப தொடங்கப்பட உள்ளன. இந்தியாவிலேயே முதல் முதலாக சுற்றுலா முகவர்கள் சிங்கப்பூர் மற்றும் மலேசியா ஆகிய நாடுகளில் இக்கழகத்தினால் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இணைப்பு VI.

(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—52 வினா எண். 11941 க்கான விடையைக் காண்க.)

''அரசுத் தொழிற்சாலைப் பணியாளர்கள் உதவி பெறும் வருங்கால வைப்பு நிதித் திட்டம் என்ற பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் ஒன்றினை அரசு 1—4—70 முதல் கொண்டு வந்தது. இத்திட்டம் அரசுக்குச் சொந்தமான தொழிற்சாலைப் பிரிவுகளில் பணியாற்றும் எல்லாத் தொழிலாளர்களுக்கும் பொருந்தும். இதனால் வருங்கால வைப்பு நிதி (பல்வகை) சட்டத்தினை இந் நிறுவனங்கள் நடைமுறைப்படுத்துவதிலிருந்து இறுதியான விதிவிலக்கு அளிக்கும் வகையில், தற்காலிக 'தளர்த்துதல் ஆணை' யொன்று 38 நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டது.

2. வருங்கால வைப்பு நிதி நிறுவனத்திலிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட வேண்டிய மொத்தத் தொகையான சுமார் ரூ. 176 இலட்சங்களில் ரூ. 15 இலட்சங்கள் ஏற்கனவே மாற்றப் பட்டுவிட்டது. மீதித் தொகையான சுமார் 161 இலட்சங்களை மாற்றம் செய்யும் வழி வகைகளுக்கென, வருங்கால வைப்பு நிதி நிறுவனம் தமிழக அரசுக்கு செயற்குறிப்பொன்றினை அனுப்பியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு VII.

(330-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத—53 வினா எண். 12038-க்கான விடையைக் காண்க.)

(அ) அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களுக்கு நியாய வாடகை, நிர்ணயம் செய்ய இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரால் 1976 நவம்பரில் நியாய வாடகை நிர்ணயக் குழுக்கள் அமைக்கப்பட்டன. சம்பந்தப்பட்ட துணை ஆணையரைத் தலைவராகவும் அறநிலையத்துறையின் செயல் பொறியாளரை தொழில் நுட்ப உறுப்பினராகவும் ஆலயச் செயல் அலுவலரைச் செயலாளராகவும் கொண்டனவாக அவை இருந்தன. இக்குழுக்கள் பொதுப் பணித்துறை பின்பற்றும் வித